# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு
# 2017 -2018
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 8

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. திருத்தக்கதேவர் எழுதியது

அ) மணிமேகலை ☐ ஆ) சிலப்பதிகாரம் ☐

இ) சீவகசிந்தாமணி ☐ ஈ) குண்டலகேசி ☐

2. பண்டாரவன்னியனால் பீரங்கிகள் கைப்பற்றப்பட்ட இடம்

அ) பூநகரி ☐ ஆ) யாழ்ப்பாணம் ☐

இ) மன்னார் ☐ ஈ) முல்லைத்தீவு ☐

3. கூறுங்கள் என்ற பயனிலைக்குரிய எழுவாய்

அ) நீ ☐ ஆ) நான் ☐

இ) அவர்கள் ☐ ஈ) நீங்கள் ☐

4. ஆய்ச்சியருடைய கைக்கு வந்த பின் நீர் பெற்ற பெயர்

அ) மோர் ☐ ஆ) தண்ணீர் ☐

இ) தேநீர் ☐ ஈ) வெந்நீர் ☐

5. ''அருமையாய்க் கிடைத்திட்ட இக்கனியுண்டால் ஆயுள் நீளும்'' எனக் கூறியவர்

அ) ஔவையார் ☐ ஆ) காவலர் ☐

இ) துறவி ☐ ஈ) அமைச்சர் ☐

6. இல் என்பது

அ) 3 ஆம் வேற்றுமை உருபு ☐

ஆ) 4 ஆம் வேற்றுமை உருபு ☐

இ) 5 ஆம் வேற்றுமை உருபு ☐

ஈ) 6 ஆம் வேற்றுமை உருபு ☐

7. செருக்கொடு மலர்ந்து நின்ற மலர்

அ) சம்பங்கி ☐ ஆ) செவ்வந்தி ☐

இ) முல்லை ☐ ஈ ) காட்டுமல்லிகை ☐

8. பண்டாரவன்னியனின் ஆட்சியின்போது கண்டி அரசனாக இருந்தவன்

அ) இராசசிம்மன் ☐ ஆ) புவனேகபாகு ☐

இ) விக்கிரமராசசிங்கன் ☐ ஈ ) நரசிங்கன் ☐

9. சான்றோர் எல்லா உயிர்களிடத்தும் அன்பாய் இருப்பர்.
இச்சொல்லியத்தில் இடம்பெறாத சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) அடைமொழி ☐ ஈ ) செயப்படுபொருள் ☐

10. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) வைரவிழா ☐ ஆ) பவளவிழா ☐

இ) பொன்விழா ☐ ஈ ) வெள்ளிவிழா ☐

11. இந்தியத்திடம் அருளாண்மை வழியில் அறம்கேட்டு உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தவர்

அ) சேரன் ☐ ஆ) திலீபன் ☐

இ) சங்கர் ☐ ஈ ) தீபன் ☐

12. பாவலன் + ஐ என்பதைப் புணர்த்தி எழுதினால்

அ) பாவலனை ☐ ஆ) பாவலன்னை ☐

இ) பாவலனய் ☐ ஈ ) பாவலனைய் ☐

13. மழைநீர் நிறைந்து ஊரெல்லாம் குளிர்ச்சியடையும் காலம்

அ) கோடைகாலம் ☐ ஆ) இலைதளிர்காலம் ☐

இ) இலைதுளிர்காலம் ☐ ஈ ) மாரிகாலம் ☐

14. ‘‘வலம்படு வாய்வாள்ஏந்தி ஒன்னார்....’’ எனத்தொடங்கும் பாடலைப் பாடியவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) சின்னத்தம்பிப்புலவர் ☐

இ) ஔவையார் ☐ ஈ ) கபிலர் ☐

15. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கீழேகீழே ☐ ஆ) குபுகுபு ☐

இ) ஊர்ஊர் ☐ ஈ ) ஓடுஓடு ☐

16. புதிதாகத் தோன்றிய இலையை _________ என அழைப்பர்.

அ) தளிர் ☐ ஆ) சருகு ☐

இ) பழுப்பு ☐ ஈ ) கொழுந்து ☐

17. பண்டாரவன்னியனுக்குக் கல்வெட்டு நாட்டியவன்

அ) றொபேட் நொக்சு ☐ ஆ) வொன்றிபேக் ☐

இ) யே.பி.லூயிசு ☐ ஈ) கென்றிமார்சல் ☐

18. படிக்கிறாள் என்ற சொல்லின் விகுதி

அ) ள் ☐ ஆ) கிறு ☐

இ) ஆள் ☐ ஈ) படி ☐

19. அறிஞர்கள் கூடி எதிர்உரை செய்யும் அரங்கு

அ) வெள்ளோட்டம் ☐ ஆ) அரங்கேற்றம் ☐

இ) பட்டிமன்றம் ☐ ஈ) ஒத்திகை ☐

20. உண்டாள் என்ற சொல்லின் வினையடி

அ) உண்ட ☐ ஆ) உண் ☐

இ) உண்டு ☐ ஈ) ஆள் ☐

21. ஆங்கிலப் படைகளைக் கடலில் வைத்துக் கொன்றது

அ) வன்னி மறவர் படை ☐ ஆ) சங்கிலியன் படை ☐

இ) ஒல்லாந்தர் படை ☐ ஈ) எல்லாளன் படை ☐

22. கோட்டான் என்பது

அ) பருந்து ☐ ஆ) ஆந்தை ☐

இ) செண்பகம் ☐ ஈ) காகம் ☐

23. மயில் தோகையை விரித்து அழகாக ஆடியது. இது

அ) கூட்டுச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐

இ) வினாச்சொல்லியம் ☐ ஈ) ஏவற்சொல்லியம் ☐

24. ஏ, உம், தோறும் என்பன __________ ச் சொற்கள்.

அ) இடை ☐ ஆ) வினை ☐

இ) பெயர் ☐ ஈ) உரி ☐

25. காளமேகப்புலவர் ________ நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

அ) பதினைந்தாம் ☐ ஆ) பதின்மூன்றாம் ☐

இ) பன்னிரண்டாம் ☐ ஈ) பதினாறாம் ☐

26. வானத்தில் அழகான விண்மீன்கள் மின்னுகின்றன.
இச்சொல்லியத்தில் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) வானத்தில் ☐ ஆ) அழகான ☐

இ) விண்மீன்கள் ☐ ஈ) மின்னுகின்றன ☐

27. அரசன் என்ற சொல்லுடன் விளிவேற்றுமையைப் புணர்த்தி எழுதினால்

அ) அரசனுக்கு ☐ ஆ) அரசே! ☐

இ) அரசன் ☐ ஈ) அரசனை ☐

28. தேம்பாவணி என்பது ________ சார்ந்த நூலாகும்.

அ) சைவநெறி ☐ ஆ) கிறித்தவநெறி ☐

இ) இசுலாமியநெறி ☐ ஈ) வைணவநெறி ☐

29. தமிழின் இளமைத் தன்மையைச் சுட்டும் பெயர்

அ) தேன்தமிழ் ☐ ஆ) தீந்தமிழ் ☐

இ) பைந்தமிழ் ☐ ஈ) செந்தமிழ் ☐

30. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று

அ) சிலப்பதிகாரம் ☐ ஆ) அகநானூறு ☐

இ) புறநானூறு ☐ ஈ) திருக்குறள் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழர்தம் நெறி காட்டும் அரியதொரு அறநூல் திருக்குறள். இதனை எழுதியவர் திருவள்ளுவர். இவரது சிலையானது கன்னியாகுமரியில் முக்கடல் நடுவே அமைந்துள்ளது. இது அலைமோதும் மலைமீது வலது காலை ஊன்றி இடதுகாலை மடக்கி வைத்து நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. இச்சிலையானது வலக்கையில் அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலை முத்திரையாகப் பிடித்த வண்ணம் இடக்கையில் திருக்குறள் ஏட்டினைத் தாங்கியவாறு அருள் பொழியும் பார்வையுடன் விளங்குகின்றது. எக்காலத்தும் எல்லா மக்கட்கும் பொருந்தும் அறநெறிகளைப் பேச வேண்டும் என்ற நோக்கில் குறள் ஏட்டினைச் சுற்றி வைக்காது திறந்து வைத்து, அதன் அகத்தியத்தினைச் சுட்டிக் காட்டும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டதால் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை செதுக்கப்பட்டுள்ளது. இன்று வள்ளுவர் சிலையானது எட்டுத்திக்கிலிருந்து வரும் உலக மக்கள் அனைவரையும் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1. திருக்குறள் கூறும் முப்பால் எவை?

_______________________________________________

2. திருவள்ளுவர் சிலை நின்ற கோலத்தில் எவ்வாறு காட்சியளிக்கிறது?

_______________________________________________

_______________________________________________

3. இடக்கையில் எதனைத் தாங்கியுள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது?

_______________________________________________

4. திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் செதுக்கப்பட்டதன் கரணியம் யாது?

_______________________________________________

_______________________________________________

5. குறள் ஏட்டினைத் திறந்து வைத்ததன் நோக்கம் என்ன?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஒல்காப்பெரும்புகழ் எனப் போற்றப்படும் நூல் எது?

2. "உன்னைப் போல் எனக்கும் வாழ்வில்
உலகத்தார் உயர்வு காணார்"

இப்பாடல் வரிகள் யாரால், எதைப் பார்த்துக் கூறப்பட்டது?

3. ஈழத்து ஆசுகவி எனப் போற்றப்பட்டவர் யார்?

4. காளமேகப் புலவரது இயற்பெயரென்ன? அவர் எவ்வூரைச் சேர்ந்தவர்?

5. அதியர்மான் நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஔவையாருக்குக் கொடுத்தது ஏன்?

6. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களால் எவற்றை அறியலாம்?

7. பெங்கூற்றர் கோட்டை யாரால், எங்கே கட்டப்பட்டது?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## கடமை

| | | | | |
|---|---|---|---|---|
| போரில் | ஆண்ட | உழைத்தல் | அடிமை | நின்ற |

*தலைமுறை தலைமுறையாய்*

*தமிழர் ________________ மண்ணை*

*வந்தவர் ஆட்சி செய்ய*

*வாழ்ந்திடும் ________________ வாழ்வு*

*இன்றியே நாமும் வாழ*

*இடைவிடாது ___________ வேண்டும்*

*வீட்டிற்கே உழைத்து வாழ்தல்*

*வீரமன்றென விழித்தெழுந்து*

*நாட்டிற்காய்ப் _____________ மாய்ந்து*

*நடுகல்லில் ________________ வீரரின்*

*எண்ணம் நிறைவேற்றிட*

*என்றும் நாமும் உழைத்திடுவோம்.*

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. தரப்பட்டுள்ள வினைமுற்றுகளில் காணப்படும் காலங்களையும் இடைநிலைகளையும் எழுதுக.

| வினைமுற்று | காலம் | இடைநிலை |
|---|---|---|
| கூவுகிறது | | |
| போவான் | | |
| ஓடினான் | | |

2. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

கேளிர் :- ____________ வைதல் :- ____________

எழில் :- ____________ ககனம் :- ____________

பார் :- ____________ தீம் :- ____________

3. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

வினாச் சொல்லியம் : ____________________

கலப்புச் சொல்லியம் : ____________________

4. மும்மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

பெயர்ச் சொற்கள் :- ________ ________ ________

அடுக்குத்தொடர் :- ________ ________ ________

5. பின்வருவனவற்றின் வேற்றுமை உருபுகளை எழுதுக.

7 ஆம் வேற்றுமை :- ______________________

4 ஆம் வேற்றுமை :- ______________________

3 ஆம் வேற்றுமை :- ______________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நம்மில் பலர் உகிர் கடிக்கின்றனர். உகிர் கடிப்பது தவறான பழக்கமாகும். இதனால் நுண்ணுயிரிகள் உடலுக்குள் சென்றுவிடும். இவை எமது கண்ணுக்குத் தெரிவதில்லை. எனவே, நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள உகிர்களை வெட்டி, கைகளைக் கழுவித் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் உணவு உண்ணும்போது கட்டாயம் கைகளை நன்றாகக் கழுவிய பின்னரே உணவு உண்ண வேண்டும். ( **உகிர் - நகம்** )

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ தமிழுக்குத் தந்த கனி

✸ நீர் சென்ற சுற்றுலா

- சுற்றுலா செல்வது பற்றித் திட்டமிடல்
- அங்கு பார்த்து மகிழ்ந்தவை
- அவற்றுள் உமக்குப் பிடித்தவை
- இச்சுற்றுலாவினால் ஏற்பட்ட நன்மைகள்

✸ நட்பு

- நட்பு பற்றிக் கூறும் நூல்
- நல்ல நண்பரை இனங்காணுதல்
- நல்ல நட்பினால் ஏற்படும் நன்மைகள்
- கூடா நட்பினால் ஏற்படும் தீமைகள்

புள்ளிகள் 20